Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 26 12-11-94 சனிக்கிழமை ஓசை 267

## மட்டக்களப்பில் அரச படைகளால் 5182 பேர் கொல்லப்பட்டனர்

மட்டக்களப்பில் சிறிலங்கா அரசபடையினர் மேற்கொண்ட வன்முறைகளில் இதுவரை 5182 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு செயலக புனர்வாழ்வுப் பகுதியில் மேற்படி கொல்லப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 1990 யூன்மாதம் முதல் இடம்பெற்றுவரும் சிறிலங்காப் படையினரின் வன்முறைகளிலேயே இந்த 5182 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் இத்தொகையானது சரியானது அல்ல (6-ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியாக சந்திரிகா இன்று பதவி ஏற்பு; சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராவார்

## அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறும்

(கொழும்பு)

சிறிலங்காவின் நான்காவது ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இன்று காலை சுப வேளையில் பதவி ஏற்கவுள்ளார். இதைத்தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை இடம் பெறும். இதே சமயம் இதுவரைஅவர் வகித்த பிரதம மந்திரிப் பதவிக்கு அவரின் தாயாரும், சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமனம் பெறவுள்ளார். பிரதமர் பதவியை பெரும்பாலும் நாளை சிறிமாவோ பண்டாரநாயக்கா பொறுப்பேற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், அமோக வெற்றிபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளரும், பிரதம மந்திரியுமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இன்று ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார். இன்று காலையில் வரும் சுபவேளையில் இப்பதவி ஏற்பு வைபவம் நடைபெறவுள்ளது. இவர் சிறிலங்காவின் நான்காவது ஜனாதிபதியும் முதலாவது பெண் ஜனாதிபதியும் ஆவார்.

இப்பதவி ஏற்பு வைபவம் பிரதம நீதியரசர் ஜி.பி எஸ். சில்வா முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் நடை [6ஆம் பக்கம் பார்க்க]



## அடுத்த யூலை 15-க்கு முன்னர் ஜனாதிபதி முறையை ஒழிப்பேன்

### சந்திரிகா குமாரதுங்கா மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

அடுத்த ஆண்டு யூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பேன். அதனைத்தொடர்ந்து நாட்டின் பிரதமராக மீண்டும் நான் வருவேன் என சிறிலங்காவின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இன்று பதவி ஏற்கவுள்ள சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மக்கள் அளித்த தீர்ப்பிற்கு விரோதமாக நான் நடந்து கொள்ளப் போவதில்லை மக்கள் எதிர்பார்க்கும் சுபீட்சம் [6ஆம் பக்கம் பார்க்க]

## சமாதான முயற்சிகளுக்கு ஐரோப்பிய சமூகம் ஆதரவு

இலங்கையில்நிலவும் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில தீர்வுகாண புதிய அரசு எடுக்கும் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கென ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதென சிலஐரோப்பியசமூகநாடுகள் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

பலவருடங்களாக இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஒன்று காணப்படல் வேண்டும் என்பதை ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த ஜேர்மன், பிரான்ஸ் மற்றும்இங்கிலாந்து நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இவை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும்வகையில தனித்தனியாக அழுத்தம் கொடுப்பது ஒருநாட்டின் உள்விவகாரங்களில தலையிடுவதாக உலக அபிப்பிராயம் நிலவுவதால் இம் மூன்று நாடுகளும் இணைந்து இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணபதற்கு புதிய அரசு எடுக்கும் சகல ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளன.

இது குறித்து இம் மூன்று நாடுகளும் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கூட்டாக பிரேரணைஒன்றை கொண்டுவர தீர்மானித்துள்ளன.

ஜேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில இலங்கை அரசு சமாதானப் பேச்சு (6-ம் பக்கம் பார்க்க)

## மாற்றப்பட்ட அமைச்சரவையும் புதிய பிரதமரும் நாளை பதவி ஏற்பு

(கொழும்பு)

புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்காவும், மாற்



றியமைக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையும், நாளை ஞாயிற்றுக்கிழமை பதவி ஏற்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காவின் புதிய பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்காவை (78 வயது) நியமிக்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது

இன்று காலை சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் இதனை அடுத்து நாளை சிறிமாவோ பண்டார நாயக்காவு மாற்றி அமைக்கப்பட்ட அமைச்சரவையின் ஏனைய உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என பி.பி. ஸி தெரிவித்தது

மேலும் அமைச்சரவை முழுமையாக கூடவில்லை ஆகையால் இந்த முடிவு அதிகாரபூர்வமானது அல்ல எனவும், ஆனால் இந்த நியமனத்தை யாரும் எதிர்ப்பார்கள் என தான் கருதவில்லை எனவும் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்ததாக பி.பி.ஸி மேலும் தெரிவித்தது-

இவ்வாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமரானால் இது அவருக்கு மூன்றாவது தடவையாக இருக்கும்- இருப்பினும் போதியளவு அதிகாரங்கள் எதுவும் அவருக்கு இருக்காது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை சந்திரிகா விரைவில் [6ஆம் பக்கம் பார்க்க]

## டி. பி. விஜேதுங்கா இன்று ஓய்வு பெறுகின்றார்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இன்று ஓய்வு பெறுகிறார்.

1993 இல் நடைபெற்ற குண்டு வெடிப்பில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொல்லப்பட்டதைத்தொடர்ந்து டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இவர் ஜனாதிபதி பதவியிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார்

பிரதமர் சந்திரிகா மற்றும் இலாகாக்கள் இல்லாத அமைச்சர் சிறிமாவோ பண்டார நாயக்க உட்பட அமைச்சர்கள் பலர் நேற்று ஜனாதிபதிக்கு பிரியாவிடை கூறினர் ஜனாதிபதி ஏற் [6ஆம் பக்கம் பார்க்க]

## உறுதிமிக்க தலைமை இன்மையே ஐ.தே.க. தோல்வியுற காரணம்

### முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சிக்கு உறுதிமிக்க ஒருதலைமை இன்மையே அது தோல்வி அடைவதற்கு காரணமாயிருந்தது என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கட்சி புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும். கட்சி உட்பூசல்களைத் தீர்த்து ஒரு சுமுகமான நிலை கட்சிக்குள் ஏற்படுத்தப்படவேண்டும். இதன் மூலமே கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியும்.

தேர்தல் முடிவுகள் மூலம் மக்கள் வழங்கிய தீர்ப்பை முற்றாக ஒத்துக்கொண்டு செயற்பட வேண்டும். இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## ஐ.தே.க. படுதோல்வி யாரும் எதிர்பாராதது

### மேற்குலக இராஜதந்திரிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே கவின் படுதோல்வி யாரும் எதிர்பாராதது என்றும், பெரும்பலத்துடன் இனிமேல் திருமதி சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை [6ஆம் பக்கம் பார்க்க]

## நாம் தற்காலிக அமைதியை அல்ல நிரந்தர தீர்வையே விரும்புகிறோம்

### பூநகரி மாவீரர் நினைவுக் கூட்டத்தில் தமிழ்ச்செல்வன

நாம் தற்காலிக அமைதியை விரும்பவில்லை. நிரந்தரமான ஒரு தீர்வையே விரும்புகின்றோம் புதியஅரசு எமது பிரச்சினையை தீர்க்கும் என மக்கள் பேசுகிறார்கள் அதை நாமும் விரும்புகின்றோம் ஆனால் நாம் விழிப்பாகத்தான் இருக்கின்றோம் அரசு ஒருபுறத்தில் சமாதானம் என்கின்ற வேளையில் மறுபுறத்தில் ஆயுதக்கொள்வனவுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

சமாதானம் எப்படி இருக்கும் என்பது காலம்தான்பதில் சொல்லும்.

இவ்வாறு நேற்றைய தினம் சாவகச்சேரி றிபேக் கல்லூரிக்கு முன் தென்மராட்சி கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு ஜெயா தலைமையில் இடம்பெற்ற பூநகரி சமரில் வீரகாவியம் படைத்த மாவீரர்நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறினார்-

இந் நிகழ்வில் பூநகரி கூட்டுப்படைத் தளம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் ஞாபகார்த்தக் கல்லை [6ஆம் பக்கம் பார்க்க]

### வீரச்சாவு



2-ம் லெப். மணிவண்ணன்

மாவடி முன்மாரிப் பிரதேசத்திலுள்ள நெடுஞ்சேனைப் பகுதியில் கடந்த ஐந்தாம் [6ஆம் பக்கம் பார்க்க]

## வள்ளம் மூழ்கியது மீனவரை காணவில்லை

கடந்த புதன்கிழமை இரவு மண்டை திவுக்கு அப்பால் மீன் பிடிக்கச்சென்றமற்றொருகுருநகர் வள்ளமும் கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனில் சென்ற இருவர் நீந்திக் கரைவந்துள்ளனர். ஒருவர் இன்னமும் கரை வந்து சேரவில்லை எனத் தெரிவிக் [6ஆம் பக்கம் பார்க்க]

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவைஇன்றுவழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

### வீரச்சாவு



கப்டன அருளரசன் (றொபின)

யாழ். மாவட்டத்தில நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன்ஏற்பட்ட மோத [6ஆம பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**விற்பனைக்குண்டு**
பாமாஸ்,பொலிசிபிராமாஸ் வெள்ளடியன்இனக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு நா. கயிலைவாசன் இல 17 கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு (10064)

**விற்பனைக்கு**
நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு இறைஞ்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு:- 698/15 சபாபதி வீதி, தலையாழி (வயிரவர் கோவிலுக் கண்மையில்) யாழ்ப்பாணம் (10065)

**ஆண்டு 4**
ஆண்டு 4 வகுப்பிற்கு புலமைப் பரிசில் (1995) மாதிரி வினாத்தாள் 13. 11. 94 ஞாயிறு வெளியிடப்படும். புதிய புலமைப் பரிசில் பயிற்சி 24 தமிழ் கட்டுரைகள் 14 ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. எமது நிறுவனத்திலும், புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (10076)

**சேவை**
மூன்று மொழிகளில் மூன்று நாட்களில் றப்பர் ஸ்ராம்ஸ், டேற் ஸ்ராம்ஸ், பிளாஸ்டிக் நேம் போட்ஸ், பிளாஸ்டிக் நம்பர் பிளேட், விளம்பர போட் யாவும்செய்து கொள்ள வீமா றப்பர் ஸ்ராம்ஸ் 234, நாவலர் வீதி, (கிறகு காலை முன்பாக) ஆனைப்பந்தி சந்தி. (10030)

**இரும்புத்தகடு தண்ணீர்த்தாங்கி**
1. 8×4 சதுரஅடி ஒன்றரை நூல் தடிமன் இரும்புத்தகடு 24×4×4 கனஅடி சதுர தாங்கி 3-12 அடிநீர உருளை வடிவ தண்ணீர்த் தாங்கிகள். தொடர்பு - மில்க்வைற் (சி-10693)

**விசேட கழிவு**
இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகிய வற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவர்கள் முன் கூட்டியே ஒழுங்கு செய்து விசேட கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும் (சி - 10676)

**தவறிவிட்டது**
8 11 94 அன்று சாம் என்பவரின் கைச்சங்கிலி இணுவிலுக்கும் மல்லாகத்திற்குமிடையில் தவறிவிட்டது. சைச்சங்கிலியில் SAM என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (10028)

## பட்மின்ரன் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் ஆசிரியர்களுக்கானபட்மின்ரன் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளரங்கில் நடைபெறும்.

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இன்று நடைபெறவிருந்த போட்டிகள் மட்டும் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

## ஆசிரியர் சேவை விபரம் வர்த்த மானியில் அறிவிப்பு

புதிய ஆசிரியர் சேவை குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த மாதம் 31-ந் திகதி வெளியானது

இதன்படி இலங்கை ஆசிரியர் சேவை மூன்று வகுப்புக்களைக் கொண்டிருக்கும் ஏனைய நிர்வாக சேவைகளைப் போலவே இலங்கை ஆசிரியர் சேவையின் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பின் முதல்தரம், இரண்டாம் தரம் ஆகிய மூன்றிலும் சம்பளத் திட்டம் இருக்கும் மூன்றாம்வகுப்பின்முதல்தரம் இரண்டாம்தரம்என்பவற்றுக்கான சம்பளத்திட்டங்கள்ஏனைய நிர்வாக சேவைகளிலிருந்து வேறுபட்டனவாகும்.

இதன்படி ஆசிரியர்களின் சேவை அடிப்படையில் பிரிக்கப்படும் தரங்கள் வருமாறு,

3ம்வகுப்பு-2ம்தரம்

★ பத்து வருடத்துக்கு குறைந்த சேவையுடைய பயிற்றப்படாத ஆசிரியர்கள்

3ம் வகுப்பு 1ம்தரம்

★ 10 வருட சேவையை பூரணப்படுத்தியுள்ள பயிற்றப்படாத ஆசிரியர்கள்.

★ ஆசிரியர் பயிற்சி பெறாத டிப்ளோமா தாரிகள்.

★ பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடத்துக்கு குறைந்த சேவையுடையவர்கள்.

★ 10 வருடத்திற்கு குறைந்த சேவைக் காலத்தை யுடைய பயிற்றப்பட்ட டிப்ளோமாதாரிகள்.

★ பட்டதாரி ஆசிரியராக 10 வருடத்திற்கு குறைந்த சேவைக் காலத்தையுடைய தொழில் தகைமையற்ற பட்டதாரி ஆசிரியர்கள்.

★ பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியராக7 வருடத்திற்கு குறைந்த சேவையுடைய தொழிற் தகைமை யுடைய ஆசிரியர்கள்.

2-ம் வகுப்பு - 2-ம் தரம்

★ பயிற்சி ஆசிரியராக 20 வருடத்திற்கு மேற்பட்ட சேவையுடையவர்கள்.

★ பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியராக 17 வருட காலத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தையுடைய தொழிற்தகைமையுடைய பட்டதாரிகள்.

கிடைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்தரப்பட்ட விபரங்கள் வெளியாகின்றன.

## மழை தொடருவதால் மட்டக்களப்பில் பாதிப்பு

(மட்டக்களப்பு)

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் மட்டக்களப்பின் பல கிராமங்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனைக்கு மேற்கேயுள்ள படுவான்கரைப் பிரதேசம் கடந்த சில தினங்களாக தொடர்பின்றியுள்ளது

ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் படகுப் போக்குவரத்துக்கள் மேற்கொள்ள முடியாதுள்ளது. கிரான் பாலத்திற்கு மேலாக சுமார் பத்து அடி வெள்ளம் பாய்வதால் வயல் பிரதேசங்களில் வாழும் மக்கள் தங்கள் பகுதியை விட்டு வெளியேற முடியாத நிலையில்உள்ளனர்.

வாழைச்சேனை வாவிக்கு அப்பாலுள்ள முறுத்தானை, குடும்பிமலை, பெண்டுகல், சேனை, பிரம்பத்திவு ஆகிய கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

## அனுதாபச் செய்தி

### அமரர் அம்பலவாணர் தர்மலிங்கம் அவர்கள்

எமது சங்க உபதலைவர் திரு. த. சத்தியதாசன் அவர்களின் தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். தமது குடும்பத் தலைவனை இழந்த தவிக்கும் இவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க
(10078) பணிப்பாளர்களும், பணியாளர்களும்

# நினைவு கூருகின்றோம்...

## 12-11-1994

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

★ **கே. தெய்வநாயகம்** (தம்பிலுவில்- அம்பாறை)

★ **சின்னவன்** (மார்க்கண்டு மகேந்திரகுமார் - பொத்துவில் அம்பாறை)

1986ஆம் ஆண்டு சந்நதிவீதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**வினோத்** (கணபதிப்பிள்ளை பரதன் - உரும்பராய் வடக்கு- யாழ்)

1987ஆம் ஆண்டு யாழ்- கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ராஜ்** (ஞானமுத்து கிறிஸ்ரிதனசிலன் (மோகன்) - முருங்கன்- மன்னார்)

கனகம் புளியடிச்சந்தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். கீதன்** (வேலுப்பிள்ளை திருக்கேதீஸ்வரன் - மட்டுவில் வடக்கு - சாவகச்சேரி)

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்** (கச்சேரி - நல்லூர் வீதி- யாழ்)

1989ஆம் ஆண்டு வட்டமடு, அணைக்கட்டுப் பகுதியில் தேசவிரோதிகள் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**குகன்/பாபு** (கா. பாபு - அக்கரைப்பற்று - அம்பாறை)

1990ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப்படையினரின் விமானக் குண்டு வீச்சில் விழுப்புண்ணடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய,

**கதிர்மாஸ்ரர்** (முத்துக்குமாரு ஐங்கரன் - சித்தங்கேணி, வட்டுக் கோட்டை - யாழ்)

குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மீனா** (சுதர்சினி தங்கத்துரை - பன்னங்கண்டி, 3-ம் வாய்க்கால்- பரந்தன்)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கமலன்** ( இராமசாமி மூர்த்தி - இராமனூர் - புளியங்குளம்)

மட்டு - பெரியகளம், மஞ்சத்தொடுவாய் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோதிகள் சுற்றிவளைத்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**துடிப்பான்** ( -- -- -- மகிழடித்தீவு - மட்டு)

1991ஆம் ஆண்டு அம்பாறை - றொட்டைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**இந்துராஜா** ( மூக்கையா வனராஜா - கோமாரி, பொத்துவில்- அம்பாறை)

1992ஆம் ஆண்டு பருத்தித்துறை, சுற்கோவளம் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் எமைப்பிரிந்த,

**தேவகி** (சத்தியகலா அருளன் - குரும்பசிட்டி, தெல்லிப்பழை- யாழ்)

1993 ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவக் கடற்படைக் கூட்டுப் படைத் தளம் மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய,

**கடற்கரும்புலி மேஜர் குமணன்/கோபி** (சுப்பிரமணியம் செல்வலிங்கம் - பல்லவராயன்கட்டு, பூநகரி - மன்னார்)

பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கடற்படைக் கூட்டுத் தளம் மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**லெப். கேணல் அன்பு** (பொன்னம்பலம் சரவணபவான் - சுந்தையாலேன் - சாவகச்சேரி (பூநகரி - மன்னார்)

**லெப். கேணல் கோதை/பாமா** (சண்முகசுந்தரம் சியாமளா - இன்பருட்டி - அல்வாய்)

**மேஜர் றூபன்** (குமாரசாமி சபாரத்தினம் - கிரான் - மட்டு)

**மேஜர் புவிராஜ்** (குமாரசாமி உதயகுமார் - கன்னங்குடா - மட்டு)

**மேஜர் ஈழவன்** (குழந்தைவேல் பத்மநாதன் - கிரான்-மட்டு)

**மேஜர் மகேஸ்வரமூர்த்தி** (ஞானசுந்தரம் விஜயகுமார் - சொருவில் - மன்னம்பிட்டி - மட்டு)

கப்டன் கமலேசன்/ஜராட் (கமலநாதன் சுதாகரன் - கோவில் போரதீவு - மட்டு)

,, பவனீதன் (சிவலிங்கம் இளங்கோவன் - சொருவில் - மன்னம்பிட்டி - மட்டு)

கப்டன் அழகுராஜா/கின்சிலி (செல்லப்பிள்ளை - மனோகர் உப்போடை வீதி - மட்டு)

,, பரனீதன் (சிவலிங்கம் புஸ்பராஜா - வந்தாறுமூலை - மட்டு)

,, நிறஞ்சன் (பாபு இராஜசிங்கம் - வற்றாப்பளை - முள்ளியவளை)

,, தம்பா (கனகரத்தினம் மதிவதனன் - மதினாநகர், இரணைஇலுப்பைக்குளம் (பாவற்குளம்)

,, வள்ளுவன்/நியூ (நடராசா தனபாலசிங்கம் - 175, செல்வபுரம் - கிளி (நெடுந்தீவு)

,, செந்தாமரை/கலியுகன் (செல்லத்தம்பி சந்திரன் - கடற்கரைவீதி - மட்டு)

,, செங்கண்ணன் (ஏரோனி ஜேக்கப் - கினாலி - எழுதுமட்டுவாள்)

லெப் நித்தியீஸ்வரன்/ராஜன் (நவரெத்தினம் மனோகரன் - ஈச்சந்தீவு - மட்டு)

,, பௌத்திரன் (ஜெகநாதன் லவக்குமார் - முனைத்தீவு - மட்டு)

,, புகழேந்தி (பொன்னுத்துரை ரவிச்சந்திரன் - கல்வியங்காடு - யாழ் (மண்டூர் - மட்டு)

,, கலாதேவன்/பார்த்திபன் (கணபதிப்பிள்ளை தேவநாயகம் - முனைக்காடு - மட்டு)

,, துசான் (தேவராஜா பாக்கியராஜா - விநாயகபுரம் - அம்பாறை)

,, சொரூபராஜன் (அழகிப்போடி கோபாலப்பிள்ளை - மகிழடித்தீவு - மட்டு)

,, மகாதேவா/பிரின்ஸ் (ஆறுமுகம் பிரகலாதன் - கிண்ணியடி - மட்டு)

,, வளவன் (இளையதம்பி புஸ்பராஜா - சவளக்கடை, கல்முனை - அம்பாறை)

,, ஜேசுதாசன்/ரஞ்சன் (சேம்ராஜ் நவனீதராஜ் - ஓமந்தை (கண்டி)

,, கலைச்செல்வன் (சிவப்பிரகாசம் சுரேஸ்குமார் - வவுனியா (கொழும்பு)

,, தேவன் (அரியபுத்திரன் தருமசீலன் - துணுக்காய் (நெடுந்தீவு)

,, காளிதாஸ் (செல்லத்தம்பி சிவநாதன் - மருதோடை, ஓமந்தை - வவுனியா)

,, யசோதரன் (கணபதிப்பிள்ளை தமிழரசன் - ஒலுமடு - நெடுங்கேணி (பட்டிக்குடியிருப்பு)

,, உதயவர்ணன் (சோமசுந்தரம் இந்திரன் - பொன்னநகர் - முல்லைத்தீவு (தென்னமரவாடி)

,, பேரூர்நம்பி/லிங்கம் (நாகமுத்து சுந்தரலிங்கம் - இளவாலை - யாழ்)

,, குகதாஸ் (அந்தோனி தேவமனோகரன் - கள்ளியகட்டைக்காடு - மன்னார்)

,, இளமுருகன்/தீபன் (தேவதாஸ் ஜேதாஸ் - 2ம் குறுக்குத் தெரு, பாசையூர் - யாழ்)

,, மாமூலன்/லெனின் (ஜெயபாலசிங்கம் தங்கநாயகன்-பளை (திருமலை)

,, நெடுங்கீரன்/சங்கிலி (பரமானந்தம் இராசா - பழுகாமம்- மட்டு)

,, நாச்சியப்பன் (சந்திரசேகர் சுரேஸ் - தாவடி தெற்கு- கொக்குவில்)

,, குணரட்ணம் (தங்கராசா ஜெயசிங்கம் - ஆனந்தம் வைரவர் கோயிலடி - மானிப்பாய்)

,, ஜீவன் (சத்துருக்கன் அமிர்தலிங்கம் - 2-ம் குறிச்சி, தம்பிலுவில் - அம்பாறை)

2ம் லெப் கலைச்செல்வன் (சின்னத்துரை ராஜன்- தம்பிலுவில்- 02 - அம்பாறை)

,, மருது (சின்னத்தம்பி யோகராசா - 1-ம்குறிச்சி, மண்டூர்- மட்டு)

,, செல்வன் (வேலுப்பிள்ளை குமாரகுரு - மயிலம்பாவெளி - மட்டு)

,, பல்லவராயன்/பாண்டியன் (சிவப்பிரகாசம் தம்பையா - சித்தாண்டி - மட்டு)

,, கந்தப்பன்/நரேந்திரன் (சுந்தையா சண்முகராஜா- 11/15, சென்றல்கேம்ப்)

,, தனுசன் (அருணாசலம் சின்னராசா - மதிரன்காட்டு கொலனி - மட்டு)

,, உமாகாந்/நிதன் (நாகமுத்து கணேஷ் - கரையாக்கந்தீவு - மட்டு)

,, சந்திரவாசன்/சந்திரகாந்தன் (நடராசா ரவிச்சந்திரன் - 15-ம் கிராமம் - மட்டு)

,, அவதன் (சபாபதி ஜெயதீசன் - 40-ம் கிராமம் - மட்டு)

,, 2-ம்லெப் சிலம்பரசன் (வேலுப்பிள்ளை சிவராஜா- நாவலடி, றோட் - மட்டு)

,, சுஜிதராஜ்/சுஜித்(சாமித்தம்பி ஜெகதீஸ்வரன் -கல்முனை- 01 - அம்பாறை)

,, செல்வந்தன் (பூபாலசிங்கம் உதயகுமார் - புதுக்குளம் வீதி, ஒட்டிசுட்டான் - முல்லை)

,, தர்மராசா (எதிர்ராசா ஜெயக்குமார்- பழம்பாசிறோட் நெடுங்கேணி - (யாழ்)

,, ஞானதீபன்/புஸ்பராசா (வல்லிபுரம் சிவகுமார்- பொன்நகர் - முள்ளியவளை - (திருமலை)

,, அற்புதன் (கோவிந்தசாமி செல்லத்துரை - தேவிபுரம் சந்தி - முல்லைத்தீவு)

,, சிவகுமாரன் (குழந்தைவேலு சத்தியேந்திரா - கொக்குவில் - யாழ்) (வேலணை)

,, தியாகலிங்கம் (டேவிற் ஜேசுதாசன் - 155-ம்கட்டை - கிளிநொச்சி) (கண்டி)

,, தங்கையா (தம்பிமுத்து ரவிசங்கர் - உருத்திரபுரம்- கிளிநொச்சி)

,, நெடியோன்/ரவீந்திரன் (பொன்னையா தியாகராஜா- மண்டூர்- மட்டு)

,, புரட்சி (பிரான்சிஸ் அமலதாஸ் பர்ணாந்து- வட்டக்கண்டல் - மன்னார்)

,, சுரேந்தினி (மனோகரன் திலகராணி - மாட்டின் றோட், யாழ்) (ஊர்காவற்றுறை)

,, குமரப்பா (விமலகுமார் பேதுறு - அரியாலை கிழக்கு- யாழ்)

,, மணிமாறன் (தம்பிராஜா இரகுலதரன் - மானிப்பாய் வீதி, உரும்பராய் மேற்கு)

சுபன் (சோமசுந்தரம் தயாபரன்- ஆரையம்பதி - 01- மட்டு)

காருண்ணியராஜ்(நல்லதம்பி கணேஷ் - சித்தாண்டி - மட்டு)

மிரேஸ் (இளையதம்பி விகலாயரஞ்சன் - 5 -ம் வட்டாரம், வாகரை - மட்டு)

இளங்கதிர்/வினோத் (செல்வரெட்ணம் சுரேஸ் - அம்பாறை) (சேனைக்குடியிருப்பு)

பதிபாலன் (வீரசிங்கம் ஆனந்தன் - தேற்றாத்தீவு - 02- மட்டு)

தயாளராஜ் (தியாகராஜா புவனேந்திரன் - கறுவாக்கேணி-மட்டு)

பாண்டியநாதன் (தருமதுரை விவேகானந்தன் - கன்னங்குடா- மட்டு)

ஞானசிங்கம் (முத்துலிங்கம் யோகராஜா - மாவடிவேம்பு - மட்டு)

தீவேந்தன் (ஆனந்தராஜா புஸ்பராஜா - புல்லுமலை - மட்டு)

அந்தாகரன்/ரவீந்திரன் (சிதம்பரப்பிள்ளை யோகன் - உன்னிச்சை) (காரைதீவு)

இராவணன் (இராமக்குட்டி மோகன் - மண்டூர் - மட்டு)

அருளாமணி/அண்ணாமணி(சிவானந்தம் சந்திரகுமார் - தும்பளை - மட்டு)

பருதி/ருத் (பாக்கியநாதன் மனோகரன் - 3ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

பொன்னம்பலம் (மகாதேவகுலசிங்கம் கலைக்குமார் - 3ம்வட்டாரம் - முள்ளியவளை)

எழில்முதல்வன் (தம்பித்துரை தவக்குமார் - 21ம் வாய்க்கால், விசுவமடு - கிளிநொச்சி)

ஜெயகரன் (இராஜேந்திரம் இராஜன் - வேங்கைவீதி - கிளிநொச்சி (ஊர்காவற்றுறை)

முருகவேல் (நாகேந்திரம் பிரபாகரன் - சாமி வீதி, ஆவரங்கால் - புத்தூர்)

பதி (சிவலிங்கம் பிறேம்குமார் - 8ம் குறுக்குத்தெரு, இருதயபுரம் மேற்கு - மட்டு)

செம்பகன் (கந்தையா சுப்பிரமணியம் - குருவில்வான், வட்டக்கண்டல் - மன்னார்)

மகாதேவி/சாரதா (இராமநாதன் நிருகா - மில்லேன் - மல்லாகம்)

ஈழக்கன்னி (கந்தையா ஆனந்தி - தண்ணீர்தாங்கியடி, முருங்கன் - மன்னார்)

அண்ணல் (சின்னவன் ரூபன் - ஓட்டுமடம், யாழ் (சுழிபுரம்)

இளையதம்பி (மாடசாமி இராமச்சந்திரன் - உசன், மிருசுவில் - யாழ்)

வேங்கையன் (ராதாகிருஸ்ணன் கோபிநாதன் - கோபிவீதி,மானிப்பாய் மேற்கு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் (சி-10692)

# சமூகசீர்கேடு புரிந்தவருக்கு தண்டனை விதிப்பு

(தென்மராட்சி)

சமூகச்சீர்கேடு புரிந்த ஆணுக்குகுற்றப்பணமும்சிறைத்தண்டனையும் என சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பளித்தது.

வண்ணாங்கேணி பகுதியைச் சேர்ந்த திருமணம் செய்த ஆண் ஒருவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார் என சாவகச்சேரி காவல்துறையினர் இவரை மன்றில் முற்படுத்தினர்.

மன்றானது குற்றவாளி குற்றத்தினை ஒப்புக்கொண்டதன் பெயரில் இவருக்கு எச்சரித்து இனி எதுவித தொடர்பும் இல்லாது இருக்கும் படியும் குற்றப்பணமாக 2500/- ரூபாவும் 1½ மாதம், சிறையும் என தீர்ப்பளிக்கப்பட்டது. (86)

## Christmas Cakes Demonstration

நத்தார் காலத்துக்கான கேக் செய்முறைகள்

1. றிச் கேக் (Rich Cake)
2. லவ் கேக் (Love Cake)
3. லைட் புரூட் கேக் (Light Fruit Cake)
4. ஆமன் சீஸ் கேக் (Almond Cheese Cake)

காலம்: 20-11 94 ஞாயிற்றுக்கிழமை

குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதால் 17-11-94க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

யோகி ஹோம் சயன்ஸ் அகடமி
71, நாயன்மார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம். (10074)

# இலவச கண்ணாடி வழங்கப்படவுள்ளது

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டோருக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இலவச கண்ணாடியினை வழங்கவுள்ளனர்.

இவர்களில் 79 பேருக்கு கடந்த கடந்த 6ம்திகதி அன்று சாவகச்சேரி மருத்துவமனையில் கண் பரிசோதனை, சலரோக பரிசோதனை, இரத்த அமுக்கப் பரிசோதனை செய்யப்பட்டு நோய்வாய்ப்பட்டவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இதில் கண் பார்வை குறைந்த மேற்படி 79 பேருக்கும் கண்ணாடி சிபார்சு செய்யப்பட்டது. கண்ணாடிகள் வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளன. வறிய மக்களின் கஷ்டத்தினை கருத்திற்கொண்டு லயன்ஸ் கழகத்துடன் இணைந்து டாக்டர் செல்வி சரவணமுத்து சேவையாற்றி வருகின்றார். (86)

# யுத்தம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவாது

- பட்டபொல நந்த தேரோ

[கொழும்பு]

யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது யுத்தம் என்பது சமாதானத்தின் எதிரியாகும்- வடக்கு, தெற்கு மக்கள் ஒன்றிணைந்து யுத்தத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என பட்டபொல நந்த தேரோ தெரிவித்துள்ளார்-

காலியில் நடந்த யுத்தம் வேண்டாம் என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்-

வடக்கின் பிரச்சினை தலைதூக்க அரசியல் தலைவர்களே காரணம் அரசியல் தலைவர்களின் குறுகிய கொள்கை காரணமாக வடக்கு-கிழக்கு பிரச்சினை கொந்தளிப்பான நிலையை அடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்-

# சொத்தி உபாலிக்கு மீண்டும் விளக்க மறியல்

(கொழும்பு)

சொத்தி உபாலி எனப்படும் அரம்பவலகே டொன் உபாலி றஞ்சித் உட்பட மற்றும் ஒன்பது பேரை நவம்பர் 21ம் தி. வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது இவர்கள் அனைவரும் மாத்தளை மாநகரசபையின் ஐ.தே.க உறுப்பினரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே-

## 6-ம் நாள் நினைவு அஞ்சலி



**கடற்கரும்புலி மேஜர் வித்தி**

எம் கடலில் எம் இனத்தைச் செங்களம் ஆட வந்த சிங்களப்படையின் கப்பலை வெற்றிலைக்கேணியில் மூழ்கடித்த கடற்கரும்புலி மேஜர் வித்திக்கு வீர அஞ்சலியை செலுத்துகின்றோம்.

இடம் பெயர்ந்த பலாலி, வளலாய் கடற்றொழிலாளர் சங்கம்.

(10073)

## பூநகரியில் காவியம் படைத்த சரித்திர நாயகன்

பிறப்பு:
26.10.70

வீரச்சாவு:
12.11.93



**கடற்புலி கப்டன் செங்கண்ணன்**

ஏரோணி ஜேக்கப்

செங்கண்ணா செங்கண்ணா எங்கண்ணா சென்று விட்டாய்
விழிக்கின்ற போதெல்லாம் உன்முகத்தை காண்கிறோம்


ஓடிவிட்ட ஓராண்டில் ஒபாமல்
உன் புகழை நாவாரப் புகழ்கின்றோம்
கடற்புலியாகி களம்பல நீ கண்டாய்
கண்டவர்கள் வியந்திட வே போராடி வருவாயே
பூநகரிக் களத்தினுள்ளே புலியாகி வெடித்தாயே
விடிகின்ற பொழுதெல்லாம் வழிகளில் - நீ
விடுதலையின் காவியத்தை மறந்திடோமே
அழுது தினம் உன்னை நினைக்கின்றோம்.

12-11-94சனிக்கிழமை (இன்று) காலை 8 மணிக்கு இளாலி புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி திருப்பலிப் பூசையிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இளாலி,
எழுதமட்டுவாழ் (10067)

ஏரோணி குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். கேணல் அன்பு**

**பொன்னம்பலம் சரவணபவான்**

தாயின் மடியில் 25.09.66 — தாயக மண்ணில் 12.11.1993

பூநகரிப் போரினிலே படைகொண்ட எதிரிகளை
ஆ வென்ன அங்கும் எங்கும் அலறவைத்தே ஓட வைத்தாய்
சாவுக்கு பயந்தவர்கள் நாமல்ல என்று சரித்திரம் படைத்துக் கொண்டாய்
பார் எங்கும் நின் புகழ் பாட நாம் இன்று பெருமை கண்டோம்.
இவரோடு வீரச்சாவடைந்த சக மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலி

'அன்பு' ஒளிப் படக் கலையகம்-
இல: 06 சந்தன மாதா வீதி
2-ம் ஒழுங்கை
சுண்டுக்குளி

குடும்பத்தினரும்
அண்ணன் அண்ணி
(10075)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



# மேஜர் பூவழகு [விக்கி]

**சண்முகநாதன் விக்னேஸ்வரன்**

தோற்றம் 14.02.65 — வீரச்சாவு 12.11.93

''பூவழ'' வாகப் பொலிந்த ''விக்கி''

தலைவன்
தத்துவ
தலைமேற்
தமிழரின்
படைத்துறை
பலமிகு
கிடைத்திடத்
கிடந்தும்
பணியைப்
பற்றித்
துணிவே
துணையாய்
எங்கள்
எத்தர்
இங்கெம்
ஏந்தி
குடும்ப
கொடிய
நடுங்கி
நாலு
''பூவழ''
பூமியே
ஆ! வெனப்
ஆண்மையில்
இவனை
அனைவர்
தவணை
தங்கள்
எங்கள்
என்றும்
பொங்கும்
புகழ்சேர்

தந்த
உத்தம
கொண்டு
தனித்துவ
ஆயுதப்
கருவிகள்
தினம்தினம்
நொந்தும்
பணியாய்ப்
தொடர்ந்து
துணையெனத்
நின்று
மண்ணில்
கால்கள்
நிலமே
நின்று
ஆயுதம்
பகைவன்
அவர்கள்
திக்கிலும்
வாகப்
அதிர்ந்திடப்
பகைப்புலம்
புலிப்படைச்
நிகர்த்து
அணிபேர்
இன்றித்
ஆற்றலைத்
குடும்பம்
இரும்பூ
புலிப்படை
சுற்றமாய்

நுட்பமும்
வித்துவ
ஆயுதம்
ஆற்றலைச்
பயிற்சியில்
புதுமுறை
ஆய்வுகள்
கிளர்ந்தெழுந்
பயன்பெறு
பயம்கரு
தூயமண்
மாவீர
காலடி
இனியடி
கண்ணி
எதிர்த்திடச்
பற்பல
கோரமாய்
நாற்றிசை
அதிர்வெடி
பொலிந்த
பொறிவெடி
அலமலந்
சேனையை
வித்தாய்
அணியாய்
தமிழ்மண்
தருவோர்
இவன்பேர்
தெய்தி
மறவர்
என்றும்

திட்பமும்
நுணுக்கமும்,
செய்து;
சொன்னோன்
பற்பல
யாகக்,
செய்து,
துற்றோன்.
வகையிலே,
தாது
மீட்பில்
னானான்.
பதித்த
வையா[து]
வெடியை
செய்தான்.
கொண்டு
வரவும்;
ஓட,
வைத்தான்.
''விக்கி''
வைத்து,
துதிர்ந்திடும்
நிறுத்தினான்
விழுந்தவர்
எழுந்திடும்.
மீட்டிட[த்]
எழுக!
ஆற்றலால்
நிற்குது
பேரணிப்
வாழுவோம்.

அனைத்து மாவீரர்களுக்கும் எம் வீர அஞ்சலி

- குடும்பத்தினர்

54 பலாலி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(10066)

## யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப்பொதுச் சபைக் கூட்டம்

**18. 12. 1994**

மேற்படி கூட்டம் 1994 12 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சமாசத் தலைவர் திரு. ச முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது. இடம் பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்கள் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக்கடிதத்தையும் சமாச காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

சு. நகுலேஸ்வரன்
பதில் மாவட்டசெயலாளர்
யாழ்.மாசி.க கூ.ச.சமாசம்
யாழ்ப்பாணம்.

182½, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம். (சி-10694)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பலர்வு:
4.2.1969 21.3.1971

உதிர்வு:
12.11.1991 12.3.1991



**சாந்தன்**
தேவதிரவியம் அன்ரன் தவராசா
(தவம்)

**லெப். அறிவழகன்**
தேவதிரவியம் அல்பேட்
புஸ்பராசா

பலாலி வடக்கு.

சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்

தமிழீழத்திற்காக வித்தாகிய அன்னாரின் இலட்சியங்கள் ஈடேறுவதற்காகவும், இவர்களின் ஆன்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொலிகண்டி. (10072) - குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
12-08-1976

வீரச்சாவு:
12-11-1993

**வீரவேங்கை பிறையான்**
**செல்லத்துரை சந்திரமோகன்**

கண்ணே! கண்ணின் மணியெனத் தாலாட்டி
கண்ணை இமைகாப்பதுபோல் காத்து வளர்க்க
மண்ணை நேசித்தாய் மற்றெல்லாம் துறசென்றாய்
விண்ணேகி விட்டாய் வீரனே மறவோம் உனை

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்
கரந்தாய், பளை. (10011)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
03-11-1974



வீரச்சாவு
12-11-1993


**2-ம் லெப்.குமரபபா**
**பேதுரு விமலக்குமார்**
(நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை)

12-11-94 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர்களை அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்

முள்ளிவீதி,
பூதா கோவிலடி,
அரியாலைகிழக்கு (10036)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை**
# வேங்கையன்
**இராதாகிருஷ்ணன் கோபிதன்**

தாயின் மடியில்: 22 - 07 - 1975
தாயக விடிவில்: 12 - 11 - 1993

தாயக விடிவுக்காக ஒப்பரேசன் தவளை தாக்குதலில் வீரச்சாவு அடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய் (10043)
-குடும்பத்தினர்

# இலங்கைக்கு மேலும் உதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முடிவு

(கொழும்பு)
சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளை ஆசிய அபிவிருத்தி வங்கி பாராட்டியுள்ளது.

அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் அடுத்த நான்கு வருடத்திலும் இலங்கைக்கு அளிக்கப்படும் உதவிகள் அதிகரிக்கப்படும். 95 ம் ஆண்டில் 15 கோடி அமெரிக்க டாலர்களும், 96, 97 ம் ஆண்டுகளில் 18 கோடி அமெரிக்க டாலர்களும், 98 ம் ஆண்டில் இருபத்திரண்டரைக் கோடி அமெரிக்க டாலர்களும் உதவியாக வழங்கப்படவுள்ளது. இந்த உதவிகளுடன் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கு 15 கோடி அமெரிக்க டாலர் உதவி வழங்கப்படவுள்ளது.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை -சுன்னாகம்
## அறிவித்தல்

**கொத்தியாலடி இந்து மயான அபிவிருத்திச் சங்கம், சுன்னாகம்**

கொத்தியாலடி இந்து மயானத்தைப் பராமரிப்பதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் மேற்படி சங்கம் பொறுப்பாகவுள்ளது என்பதனை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

1995.01.01. ஆம் திகதி முதல் இம் மயானத்தில் தகனம் செய்வதற்கு பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும். உரிய கட்டணங்களை தகனம் செய்வதற்கு முன்னர், சங்கப் பொருளாளரிடம் செலுத்தி, உரிய பற்றுச்சீட்டை இருபிரதிகளில் பெற்று, 2ம் பிரதியை மயானக் காவலாளியிடம் ஒப்படைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் 95 ஆம் இலக்கத்தில் இயங்கும் சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

**கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | தகனம் செய்வதற்கு (விறகு அடுக்கல், எரித்தல், மேற்பார்வை உட்பட) | ரூபா, 250. 00 |
| 2. | காடாற்றுவதற்கு (உதவி உட்பட) | '' 100. 00 |
| 3. | கிடங்கு வெட்ட:- | |
| | 1) 6' × 3' × 4' | '' 500. 00 |
| | 2) 3' × 3' × 4' | '' 300. 00 |
| | 3) 5' × 5' × 4' — மாடு | '' 500. 00 |
| | 4) 4' × 4' × 4' — சமாதி | '' 400. 00 |
| 4. | பிரேத வண்டி வாடகை: | |
| | 1) அங்கத்தவர்கட்கு | '' 100. 00 |
| | 2) அங்கத்தவர் அல்லாதவர்களுக்கு | '' 200. 00 |
| 5. | பிரேதவண்டி தள்ளிச் சென்று விட (ஒருமுறைமட்டும்) | '' 100. 00 |

இந்த மயானத்தைப் பாவிப்பவர்கள் தங்கள் ஒத்துழைப்பைச் சங்கத்திற்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வ. தெ. பி. சபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
08-11-94. (சி 10689)

# 1-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
14 02-1965



தமிழீழ மண்ணில்
12-11-1993

# மேஜர் பூவழகு [விக்கி]
**சண்முகநாதன் விக்கினேஸ்வரன்**
படைக்கல ஆராய்ச்சியின்போது ஏற்பட்ட வெடிவிபத்தின்போது
வீரச்சாவு அடைந்தார்

ஓராண்டு ஓடி எப்படி போனது
ஓர் நொடியும் உன்நினைவு மாறவில்லை
வீறு கொண்ட புலியாய் நீ எழுந்தாய்
கவி போற்றும் பாருலகில் சங்கீதமாய் நீ ஒலித்தாய்
தங்க மகன் நீ இங்கு தமிழீழம் காண துடித்தாய்
விண் சென்று மறைந்தாலும் வீண்போகாது உன்கனவு
நாம் விரைவாக நடக்கின்றோம் விடுதலைக்குள் நுழைவதற்காய்

போராளிகள்,
தொழிலாளர்கள்.

(10063)

## முக்கிய அறிவித்தல்

மயிலிட்டி கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்பு சங்கத்திற்கு உட்பட்ட மக்கள் அனைவரும் தங்கள் குடும்ப விபரம், இழப்புக்கள் பற்றிய விபரங்களையும், தற்போதைய தொழில் விபரங்களையும் தங்கள் பகுதி பிரதிநிதிகளிடம், 25ம் திகதிக்கு முன் பதிவு செய்யவும், பிரதிநிதி அல்லாதோர் தலைவரிடம் தொடர்பு கொள்ளவும்

''நன்றி''

(10047) செயலாளர்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
02-10-1912

உதிர்வு
15-10-1994

**வேலுப்பிள்ளை கந்தையா (வைத்தியர்)**

எமது இல்லத்தில் 13-11-94 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக்கிரியையிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடிப்பிள்ளையார்,
கோவிலடி,
வரணி வடக்கு, (10068)

மக்கள்: க. கனகசிங்கம்
க. தெய்வேந்திரன்

## 31- ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
14-05-1935

மறைவு
14-10-1994

**திருமதி இரத்தினம் வல்லிபுரம்**
(பருத்தித்துறை)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்
உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

அன்பான எங்கள் அம்மாவே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும் தெய்வமாய் நின்று எங்களை வழி நடத்துவீர்களாக. அம்மா உங்கள் ஆசீர்வாதமே எம்மை வாழ்விக்கும்.

எமது அன்புத் தாயாரின் உயிரைக் காப்பாற்ற இறுதிவரை போராடிய யாழ் போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார்கள் அனைவருக்கும் (குறிப்பாக வாட் இல 2) மற்றும் மரணச்சடங்கின்போது கலந்து கொண்டு பல விதத்திலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கியோருக்கும், அனுதாபக் கடிதங்கள் அனுப்பியவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 13 . 11 . 1994 (ஞாயிறு) காலை 8 மணிக்கு எரிஞ்சம்மன் கோவிலடியில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும், அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்கா
தான் தாள் வாழ்க

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்புக்கணவர் M. வல்லிபுரம்
(மொடேன் ரெக்ஸ் ரைல்ஸ்)
பிள்ளைகள்

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.
(9997)

### சிந்தனைக்கு.

நிறைவான நிலையை அடைய வேண்டுமானால் நண்பர்களின் கண்டிப்பையும் பகைவர்களின் கண்டனத்தையும் பொருட்படுத்துவதன் மூலம், நம் குறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

-டயோஜினிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## அங்கீகாரமும் பிரச்சினையும்

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா பெற்ற வெற்றி பெரு வெற்றி என்பதில் எந்த வித கேள்விக்கும் இடமில்லை; இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஸ்ரீமா சிறிமா திசநாயக்கா எழுப்பியுள்ள ஆட்சேபம் பெரிதாக தேர்தல் முடிவுகளைப் பாதித்திருக்கும் எனக் கூறுவதற்கு வாய்ப்புக்கள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை.

சிறிலங்காவின் கடந்த காலத் தேர்தல் முடிவுகளின் வரலாற்றை அவதானித்தால் காலத்திற்குக்காலம் சிங்கள மக்கள் தமது முடிவை தெளிவாகவே அறிவித்து வந்துள்ளமை தெளிவாகும்; எடுத்துக் காட்டாக 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டாட்சியில் அமர்த்தினர் ஆனால் அக்கூட்டணி செயற்பாடுகளில் திருப்தியுறாத வேளை 1977இல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தினர்

ஆனால் அதன் பின்னர் ஐ தே கட்சி அறிமுகமாக்கிய விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் இவ்வாறாக உயர்ந்தளவு வெற்றிகளைப் பெறமுடியாத அளவிற்கு சூழ்நிலையை ஏற்படுத்தியது; இருப்பினும் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தெளிவாகவே தமது வாக்குகளைச் செலுத்தியுள்ளனர். சுமார் 62 வீதமான வாக்குகளை மக்கள் பொ; ஐ. முன்னணி வேட்பாளருக்குச் செலுத்தியுள்ளனர்.

அதாவது பொ. ஐ. முன்னணி முன்வைத்த கொள்கைக்கு மக்கள் தெளிவான அங்கீகாரம் அளித்துள்ளனர். இந்நிலையில், சிறிலங்காவின் அரசியலமைப்பு மாற்றத்தில் இருந்து இனப்பிரச்சினைக்குச் சமாதானமான தீர்வு காண்பதுவரை பொ. ஐ. முன்னணியின் கொள்கைக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றே கொள்ளலாம்;

இவ் அங்கீகாரத்தை இனிப் பயன்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது ஜனாதிபதியாகப் பொறுப்பு ஏற்கப்போகும் சந்திரிகா குமாரதுங்காவினுடைய பொறுப்பே ஆகும். இதில் அரசாங்கம் திறம்படச் செயற்படாது விட்டால் பின்னர் அது நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரலாம்

ஏனெனில் சிங்கள மக்கள் ஆதரவு அளித்தது போன்று அதனை அதே அளவிற்கு நிராகரிக்கவும் கூடியவர்கள்; 1977இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வி அடைந்ததும் தற்பொழுது ஐ.தே.க படுதோல்வி அடைந்தமையும் இவற்றிற்குச் சிறப்பான உதாரணங்கள் ஆகும்

அத்தோடு இம்முறை பொ. ஐ. முன்னணியின் வெற்றிக்கு தனியாக சிங்கள மக்கள் மட்டுமல்ல சிறுபான்மை இனங்களும், சிறிய அரசியற் கட்சிகளும் கணிசமான பங்காற்றியுள்ளன; ஆகையினால் பொ. ஐ. முன்னணி தனியாகப் பெரும்பான்மையினரின் கருத்தைப் பிரதிபலிப்பவையாக இருக்கமுடியாது; சிறுபான்மை இனங்களினதும் சிறிய கட்சிகளினதும் கருத்திற்கு ஓரளவேனும் முக்கியத்துவம் அளித்தே ஆகவேண்டும்;

இந்தவகையில் சந்திரிகா குமாரதுங்கா அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தே அவரது எதிர்கால அரசியல் உள்ளது; ஆனால் அவர் அளித்த வாக்குறுதிகளில் இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியிலான தீர்வு என்பது போன்ற வாக்குறுதிகள் இலகுவில் நிறைவேற்றக்கூடியவை அல்ல, ஏனெனில் இனப்பிரச்சினை என்பது அத்தகைய சிக்கல் நிறைந்ததாகும். அத்தோடு பலதரப்பினருடன் சம்பந்தப்பட்ட விடயமுமாகும்;

இந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்கா முன்னுள்ள பிரச்சினையாக எழப்போவது இனப்பிரச்சினைக்கு எந்த மட்டத்தில் வைத்து தீர்வு காண்பதென்பதாகும்; அதாவது ஒற்றையாட்சி முறையிலா? சமஷ்டி முறையிலா? கூட்டாட்சி முறையிலா? அத்தோடு, வடக்கு கிழக்கை இணைப்பதா? அன்றி தனித்தனியானவை என்ற ரீதியிலா? என்பதாகும்;

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம் இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய தீர்வு ஒன்றே காணப்படவேண்டும் என்பதாகும். இது தமிழ் மக்களின் பாதுகாப்பையும், சுயாட்சியையும், அங்கீகரிப்பதாக இருத்தல் வேண்டும்; இதுவே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த தீர்வாக இருக்கும். இல்லாதபட்சத்தில் தமிழ் மக்கள் சந்திரிகா குமாரதுங்கா மீது வைத்த நம்பிக்கையில் அர்த்தம் இல்லாது போய்விடலாம்;

ஆனால், இதை சந்திரிகா குமாரதுங்கா ஏற்கனவே தீர்த்துக் கொண்டிருக்கமுடியும். தேர்தலில் போட்டியிட்டபோது இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்திருக்கலாம் அதன் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி தோல்வியைத் தீர்மானித்திருக்கலாம்; ஆனால் அதனை அவர் மேற்கொள்ளாமை சிங்களப் பேரினவாதத்தின் மீது அவர் கொண்ட அச்சத்தினாலேயே என்று துணிந்து கூறலாம்; ஆனால் தற்பொழுது ஏதோ ஒருவகையில் அவருக்கு அங்கீகாரம் கிடைத்து உள்ளது. ஆகையினால் இனி பேரினவாதத்தையும் மீறி தீர்வுகாண வேண்டியது அவரது பொறுப்பே ஆகும்.

## மக்களின் நம்பிக்கையை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன்

### -திருமதி சந்திரிகா

(கொழும்பு)

நான் எதிர்பார்த்ததை விடவும், மக்கள் என்மீது பெரும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பதை எண்ணி பெருமிதம் அடைகின்றேன். அவர்களின் நம்பிக்கையை தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வேன். அதுவே எனது இலக்கு இவ்வாறு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் முன்பாக திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் இந்த வெற்றியையும் மக்கள் சமாதானமாகக் கொண்டாட வேண்டும். வன்முறைகளை ஒதுக்கி ஒரு சமாதான நிலையை மக்கள் உருவாக்க வேண்டும், நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள இந்நிலைமைகளால் இவ் வெற்றியை பெருமளவில் மக்களுடன் கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை விரைவில் நீக்கவும், வெற்றியை மக்களுடன் கொண்டாடவும் நடவடிக்கை எடுக்கப்படும்:

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நான் நிபந்தனை அற்ற பேச்சுக்களை நடத்துவதில் மிக உறுதியாக இருக்கிறேன். யுத்தத்தையும் ஊழலையும், அகற்றுவதற்கு மக்களினால் அளிக்கப்பட்ட பெரும் வரப்பிரசாதமாக இந்த வெற்றியைக் கருதுகின்றேன். நாட்டில் சமாதானமே அபிவிருத்திக்கு முக்கிய தேவை சமாதானம் இல்லாத நிலையில் அபிவிருத்தியைக் காண முடியாது. சிறுபான்மை மக்களுக்கு பல இன்னல்கள் சென்ற அரசாங்கத்தின் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது உண்மையே. எனவே அந்த மக்களின் நலனைப் பேணுவதுடன் பெரும்பான்மை மக்களின் நலன்களும் பாதுகாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெளிவாகக் கூற விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

லலித் கொலை தொடர்பான

## ஸ்கொட்லண்ட்யார்ட் முடிவு நகைப்புக்கு இடமானது

### -வெளியுறவு அமைச்சர்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஸ்கொட்லண்ட் யார்ட் புலனாய்வு அதிகாரிகளின் அறிக்கை நகைப்புக்கிடமானது என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தலைமை அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மகாநாட்டில் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் கூறும்போது, ஸ்கொட்லண்ட் யார்ட்டின் அறிக்கையை நானும் எனது சட்டத்துறையைச் சேர்ந்த சகாவான தயா பெரேராவும் ஆராய்ந்தோம்: அந்த அறிக்கை நகைப்புக்கு உரிய அறிக்கையாக இருந்தது. எனது 40 வருட சட்டத்துறை அனுபவத்தில் இதுபோன்ற ஒரு அறிக்கையை நான் பார்த்ததேயில்லை:

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா, கடற்படைத் தளபதி கிளான்சி பெர்ணாண்டோ, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொலைகள் தொடர்பாக விசாரணைகள் முழுமையாக நடைபெறவில்லை. ஆகையால் பொது மக்களின் கருத்துக்களே மேலோங்கியிருந்தன; எனவும் அவர் தெரிவித்தார்.

## ராஜதந்திரியின் மகன் மானநட்டம் கோரி வழக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சிங்கப்பூரிலிருந்து ஆயுதங்களைவிநியோகம் செய்ததற்காக முன்னாள் இராஜதந்திரியின் மகன் நாடு கடத்தப்பட்டார் என செய்தி வெளியிட்ட கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு எதிராக சிங்கப்பூரில் வசித்து வரும் தமிழர் ஒருவர் 50 இலட்சம் ரூபா மானநஷ்டம் கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

சிங்கப்பூர் கென்ட்ரிட் தேசிய பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணிபுரியும் ஹரிதரன் குணசிங்கம் என்பவரே இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார். 85ம் ஆண்டு மே 20ந் திகதி மேற்படி தவறான தகவலை குறிப்பிட்ட கொழும்புத் தினசரி முன்பக்க தலைப்புச் செய்தியாக பிரசுரித்திருந்தது

இதற்கான விசாரணைகள் அடுத்த வருடம் மார்ச் மாதம் 9, 10, 13ந் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது;

## பெற்றோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ் வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் திலகவதி பெரியதம்பி கலந்து கொண்டார்;

## ஐ.தே.க வின் படுதோல்விக்கு காமினியின் இழப்பும் காரணம்

### -ராஜித சேனாரட்னா

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி இரு முக்கிய பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இத் தேர்தலை வழிநடத்திய பிரபல தலைவர் காமினி திசாநாயக்க கொல்லப்பட்டதும், அவருடன் ஐ தே.கவின் சிறந்த பேச்சாளர்கள் பலரும் கொல்லப்பட்டதும் எதிர் நோக்கப்பட்ட இரு பிரச்சினைகள் ஆகும் இந்த நிலையிலேயே எமது கட்சி தோல்வியுற நேரிட்டது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ராஜித சேனாரட்னா தெரிவித்துள்ளார்.

பி.பி.சியின் சிங்கள சேவைக்கு செய்மதி மூலம் கலந்துரையாடிய அவர் மேலும் கூறுகையில் காமினியின் இறுதி கிரியைகள் தொடர்பான நடவடிக்கையினால் ஒரு வார காலம் பிரசாரம் நிறுத்தப்பட்டது அதன் பின்னர் பாதுகாப்பு காரணங்களினால் எமது தேர்தல் பிரசார கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டும் இடை நிறுத்தப்பட்டும் இருந்தன

இதேவேளை 90-ம் ஆண்டுகளின் பின் நடைபெற்ற தேர்தலிலே வன் செயல்கள் தலைவிரித்தாடிய தேர்தல் இது என்றும் பல பகுதியில வாக்களிப்பு நிலையங்கள் ஐந்தில் குண்டர்கள் சென்று வாக்குச் சீட்டுக்களைப் போட்டனர் என்றும் கொலன்ன தேர்தல் தொகுதியில் பல தேர்தல் நிலையங்களில் ஐ;தே.க பிரதிநிதிகள் விரட்டப்பட்டுள்ளனர். இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார் மேலும் பலாங்கொட, கொலன்ன தேர்தல் தொகுதிகளில் வாக்குகளை எண்ணும் உத்தியோகத்தர்கள் இருக்கவில்லை என்றும் கொலன்ன தேர்தல் தொகுதியில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், அவர் குறிப்பிட்டார் அத்துடன் நாடு முழுவதிலும் பரவலாக வெவ்வேறு சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வாக்களிப்பு நண்பகல் வரும் வரை ஐம்பது சதவிகிதமாக இருந்தது திடீரென எழுபத்திலைந்து சதவிகிதமாக உயர்ந்தது ஆனால் வாக்களிப்பு நிலையங்களில் மக்களைக் காண முடியவில்லை இது குறித்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகவும், சர்வதேச கண்காணிப்பு குழுவிடம் இது பற்றிய அறிக்கை ஒன்றுசமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதாவது குறைந்த அளவு வாக்களிப்பு நடைபெற்ற நிலையில் இவ்வளவு உயர்ந்த அதிகப்படியான வாக்குகள் கிடைத்தது குறித்து உண்மையிலேயே ஆச்சரியம் அடைகின்றோம் அதாவது எமது தேர்தல் நடவடிக்கையில் இவ்வாறான ஒரு நிலையை நாம் எந்த நிலையிலும் அவதானிக்கவில்லை நல்ல போட்டி ஒன்று இருக்கும் நிலை ஏற்பட்டது நாடு முழுவதும் காணப்படும் வன் செயல்கள் மூலம் இதனை ஊகிக்கக் கூடியதாக உள்ளது என இவர் மேலும் தெரிவித்தார்;

## 62 கொலைகள் உட்பட 1279 தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதி தெரிவுக்கென வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினம் முதல் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணி வரைக்கும் இடையில் 62 கொலைச் சம்பவங்களும், 1279 தேர்தல் நடைமுறை மீறல் தொடர்பான புகார்களும் கிடைக்கப் பெற்றிருப்பதாக பொலிஸ் திணைக்கள அறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

## மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது தவறானதல்ல

### பேராசிரியர் லக்ஷ்மன் ஜெயதிலக

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது தவறல்ல அதற்காக தமது கருத்துக்களை பயமுறுத்துவதன் மூலம் மற்றவர்களுக்கு திணிப்பது சரியாகாது என தேசியக்கல்வி ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜெயதிலக கூறியுள்ளார்;

பல்கலைக்கழக கல்வியில் அதிஉச்சப்பயனைப் பெறுதல் என்ற தலைப்பில் அவர் கொழும்பில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். மாணவர்கள் போஸ்டர் ஒட்டுவதற்கும் நான் எதிரானவனல்ல. தமது கருத்துக்களை ஆசிரியருக்கு நேரடியாக தெரிவிக்க அஞ்சும் வேளையிலும் மாணவர்கள் போஸ்டர் ஒட்டுகின்றனர், நான் பல்கலைக்கழகங்களில் கடமையாற்றிய சமயம் பின் நேரங்களில் மாணவரது தேவைகளை அறிய போஸ்டர்களை வாசிப்பதுண்டு எனவும் தெரிவித்தார்:

## இனவாத சக்தியின் தோல்வி அமைதிக்கு மக்கள் வாக்கு

### -தர்மசிறி சேனநாயக்க

(கொழும்பு)

இலங்கையில் இனவாத சக்திகள் தோல்வி அடைந்துவிட்டன. அமைதியின் தேடலுக்கும். நாட்டின் வளர்ச்சிக்கும் மக்கள் அளித்த தீர்ப்பு இது இவ்வாறு தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தேர்தல் முடிவு பற்றி கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர வேண்டுமென்பதில் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை இத் தேர்தல் முடிவுகள் கோடி காட்டுவதாக தமிழ் அரசியல்வாதி ஒருவர் கூறியுள்ளார்.

இனவெறி பிடித்த சக்திகளுக்கு பெரும் தோல்வியென முஸ்லிம் காங்கிரசும் சமாதான முன்னெடுப்புக்கு கிடைத்த பரிசு இதுவென இ. தொ. காவும் தேர்தல் முடிவுபற்றி கருத்து வெளியிட்டன.

## நாகர்கோவில் பகுதியில் 'சேது' நாணயம் கண்டெடுப்பு

(தென்மராட்சி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் அண்மித்த குடாரப்பு என்னும் கிராமத்தில் சேது நாணயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது-

நாகர் கோவில் பகுதியில் இந்துப்பண்பாடு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வரும் ஆசிரியர், திரு. வி கனகராசா அவர்களால் இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் வசிக்கும் ம[illegible] தியாகராசா என்பவரே இதனை அடையாளம் காட்டினார். இவரது வீட்டுக்கு அண்மையில் சிறு குழி ஒன்றை வெட்டும்போது நெருங்கிய நிலையில் உள்ள மட்பாத்திரம் ஒன்றினுள் ஒரு தொகை நாணயங்கள் கிடைக்கப் பெற்றது.

இச் சேது நாணயமானது பொதுவாக ஒழுங்கான வட்டமாக இல்லாது செம்பு உலோகத்தில் செய்துள்ளனர்-

இந்த நாணயத்தின் முகப்பில் கம்பீரமான தோற்றத்துடன் அரசன் ஒருவன் காணப்படுகின்றான் அவனது இருபக்கமும் இரண்டு குத்துவிளக்குகள் காணப்படுகின்றன- சூலம் ஒன்றும் மலர்த் தட்டம் ஒன்றும் இடது பக்கத்தில் காணப்படுகின்றன-

நாணயத்தின் பின்புறத்தில் அழகிய திமில் பருத்த எருது ஒன்றும் படுத்துள்ளது- அதற்கு மேல் "சேது" என்றும் தமிழில் எழுதப் பட்டுள்ளதுடன் இளம் பிறைச் சந்திரனும் காணப்பட்டது-

இந்த நாணயங்கள் கி-பி 13-17 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் நல்லூரைத் தலைமையாக கொண்டு ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகளால் வெளியிடப்பட்டவையென தெரியவருகின்றது இக்காலத்தில் பொன் வெள்ளி, செம்பினால் நாணயங்கள் வெளியிடப்பட்டு இருந்ததாக அறியப்படுகின்றது-

இத்தகைய சேது அடைமொழி இராமேஸ்வரத்துடன் தொடர்புடையது என தெரியவருகின்றது-

இந் நாணயங்கள் நல்லூர், திருநெல்வேலி, கோப்பாய், புத்தூர், வல்லிபுரம், நாரந்தனை, மாந்தளம், மாந்தைப்பகுதிகளில் கிடைத்துள்ளதாக கூறுகின்றார்கள் ஆயினும் நாகர்கோவில் பகுதியில் தற்போது கிடைத்துள்ளது-

அப்பகுதி வரலாற்றுச் சிறப்பினை மேலும் வலுவூட்டுகின்றது எனலாம்- இந்த நாணயங்கள் மூலம் அரசியல் பொருளாதாரம், இவர்களது தொழிற்சாலையில் வேலைசெய்த வினைத்திறன் மிக்க தொழிலாளர் பற்றியும் குறிப்பிடுகின்றது- [86]

## பொலிஸ் எச்சரிக்கையால் மக்களுக்கு பெரும் பாதிப்பு

(மட்டக்களப்பு)

முருகைக்கற்கள் தோண்டி எடுக்கப்படுவதால், சுற்றாடலுக்குப் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதிப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் பெருமளவு முருகைக்கற்கள் தோண்டி எடுக்கப்படுவதாலும், அவற்றை மூலப்பொருளாகக் கொண்டு சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்படுவதாலும், சுற்றாடலுக்கு பாதிப்புஏற்படுகிறது இவ்வாறு கல்குடா காயாங்கேணி பாசிக்குடா, மாங்கேணி, பனிச்சங்கேணி பகுதிகளில் வாழும் மக்கள் பொலிசாரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் சுமார் ஒரு நூற்றாண்டு முன்பு இருந்தே இப்பகுதியில் முருகைக்கற்களைத் தோண்டி எடுப்பதிலும், சுண்ணாம்பு உற்பத்தி செய்வதிலும் இப் பகுதி மக்கள் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது: யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து இருந்த பின்னர் தற்போது சொந்த இடங்களுக்கு திரும்பும் இவர்கள் இவ்வாறு எச்சரிக்கப்படுவதால் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது இத்தொழிலுக்கு மாற்றீடாக வேறுதொழிலில் ஈடுபடும்வசதி வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை எனவும், இத் தொழிலையும் செய்யாவிட்டால் ஒரு நேரக்கஞ்சிக்கு கூட பரிதவிக்கும் நிலை இருப்பதாகவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 11. 12
சனி இரவு

08. 01 - அறிவியற் கலசம்
08. 10 - நிகழ்வும்பகிர்வும்
08. 25 - நேயர் கடிதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - வேலணையூர் சுரேஸ் எழுதிய "ஆச்சியின் மண்"
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994. 11. 13
ஞாயிறு காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.
08. 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## தவறிவிட்டது

09-11-94 அதிகாலை 3-00 மணிக்கும் 5-00 மணிக்கும் இடையில் கிளாலியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் பெரிய சூட்கேஸ் கறுப்பு நிறம் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; சன்மானம் வழங்கப்படும்

(10077)

## சிறுமி பலி

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை முகாம் அதிரடிப்படையினரும் 'ரெலோ' தேசத்துரோகிகளும் சேர்ந்து நெடுஞ்சேலை பகுதியை சுற்றிவளைத்து விட்டு திரும்பிச் செல்கையில் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் வீட்டிலிருந்த சிறுமி பலியானார்.

சாமந்தியாறு பகுதியில் கடந்த 5ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் சத்தியானந்தம் தர்சினி (வயது 7, சாமந்தியாறு மட்டக்களப்பு) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

# ஆயுத விற்பனையை நிறுத்துவதே இனப் பிரச்சினையைத் தீர்க்க வழி

## ஐரோப்பிய நாடுகளில் வண: பிதா இம்மானுவேல் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய நாடுகள் சிறிலங்கா அரசிற்கு விற்பனை செய்யும் ஆயுதங்களை நிறுத்துவதன் மூலமே இனப் பிரச்சினையை முடிவுக்குகொண்டு வர முடியுமென அருட்திரு எஸ். யே. இம்மானுவேல் தெரிவித்தார்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு பல வெளியுறவு அமைச்சர்களின் அதிகாரிகளை சந்தித்ததுடன் 50ற்கும் மேற்பட்ட கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு திரும்பிய யாழ். மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் முதன்மைக் குரு அருட்திரு எஸ் யே. இம்மானுவேல் நேற்று உள்ளூர் பத்திரிகையாளருடனான சந்திப்பொன்றை நடாத்தினார்.

இதன்போது அவர் இலங்கையில் நடப்பது இனப்பிரச்சினையே அன்றிபயங்கரவாதப் பிரச்சினை அல்ல தமது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துவதற்காக பலவிதமான அர்ப்பணிப்புக்களிற்கு மத்தியில் நடத்திவரும் புனிதமான போராட்டத்தை சிறிலங்கா அரசு திட்டமிட்டு பயங்கரவாத பிரச்சினையாக அதை உலகிற்கு காட்டி வருகிறது என்பதை தான் தெளிவுபடுத்தியதாக கூறினார்.

இலங்கையில் நடைபெறும் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணமுடியுமென எண்ணுவது தவறு நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இவ் உரிமைப் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்துள்ளனர் அதனை இலகுவில் மறந்து விட்டு கண்களை மூடிக்கொண்டு சமாதானத்தைக் கட்டிப்பிடிக்க தமிழ் மக்கள் தயார் இல்லை நீண்டகால பிரச்சினை நிதானத்துடன் அணுகப்பட வேண்டியுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் இவ் ஆயுத விநியோகத்தை நிறுத்துமேயானால் சிறிலங்காவில் நடக்கும் இன அழிவுகள் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என தான் வலியுறுத்தியதாக தெரிவித்தார்

வீரச்சாவு - கப்டன்

லில் கப்டன் அருளரசன்/றொபின் (மல்லி மனோகரன் சின்னத்தோட்டம் பருத்தித்துறை) என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இவரின் வித்துடல் இன்று மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மு.ப. 10.30 மணியளவில் பருத்தித்துறை பழைய பேருந்து நிலையத்தில் தமிழீழ மக்களின் இறுதி வீர வணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீர வணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் வீர விதை குழியில் விதைக்கப்படும்.

ஜனாதிபதியாக

பெறவுள்ளது.

ஆடம்பரமின்றி நடைபெறவுள்ள இப்பதவி ஏற்பு வைபவத்தைத் தொடர்ந்து முப்படைகளின் விசேட அணிவகுப்புமரியாதையை புதிய ஜனாதிபதி ஏற்றுக்கொள்வார்.

டி. பி,

பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரதமர் சந்திரிகா அங்கு உரை நிகழ்த்தினார் இதன்போது அவர் விஜேதுங்கா தனது பதவிக் காலத்தில் ஆற்றிய சேவைகளைப் பாராட்டினார்.

மாற்றப்பட்ட

ஒழிப்பதாக கூறியுள்ளார்- அவ்வாறு ஒழிக்கப்பட்டதும் தாயும் மகளும் தத்தமது பதவிகளைப் பரிமாறிக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அது மேலும் தெரிவித்தது-

இதேவேளைநிதியமைச்சும், இனவிவகாரங்களுக்கான அமைச்சும் சந்திரிகா தம் வசம் வைத்திருக்கலாம் என தான் கருதுவதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

ஐ தே க

நடத்தக் கூடும் என்றும் கொழும்பிலுள்ள மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில்

எனவும் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை இதைவிட அதிகமானது எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வீரச்சாவு

திகதி சின்றுசிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்தபோது இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் காயமடைந்து பின்னர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப் மணிவண்ணன் (அமரசிங்கம் பவழசிங்கம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

நாம்

திரு. தமிழ்ச்செல்வன் திரைநீக்கம் செய்துவைத்து மாலை அணிவித்தார்- தென்மராட்சி கோட்டப் பொறுப்பாளர் லெப். கேணல் குணாவின் நினைவுருவப் படத்திற்கு அவரது தாயார் மலர்மாலை அணிவித்தார், பின்னர் போராளிகள், பொதுமக்கள் வர்த்தகர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா தான் தமிழருக்கு உரிமை கொடுப்பதாக கூறி பின் ஒப்பந்தத்தையேகிழித்து எறிந்தவர். அதேபோல அவரது தாய்சிறிமாவும் தலைவர் பிரபாகரன் 'பயங்கரவாதி' என்று கூறியவர். இப்படியே சந்ததிகள் மாறி மாறி தமிழர்களுடைய பிரச்சினை தீர்ப்பதாக கூறி வந்து இறுதியில் முறிவடைந்ததையும் நாம் மறக்கக் கூடாது-

நாம் போராட்டத்திலே கிட்டத்தட்ட நாற்பது ஆயிரம் மக்களையும், ஏழாயிரம் போராளிகளையும் இழந்து பெரும் வேதனைகள் சோதனைகளைத் தாண்டி வெகு வேகமாக முன்னேறிக்கொண்டு இருக்கின்றோம்- நாம் எமது உரிமையினை பெற்று எடுக்க உறுதுணையாக மக்கள் அணிதிரள வேண்டும்-

இந்தப் பூநகரி சமரில் நாம்

வள்ளம்

கப்படுகிறது

குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த அருளானந்தம் அல்போன்ஸ் (கிளியன்- வயது 42) என்னும் மீனவரே வந்து சேராதவராவார்.

இவருடன் கடந்த புதன்கிழமை இரு வள்ளங்கள் மூழ்கியதில் மூவர் திரும்பி வரவில்லை. மூவர் நீந்திக் கரை வந்தனர்.

மற்றொரு வள்ளமும் அதனில் போன நால்வர் பற்றிய தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. (21)

அடுத்த

அவர்களுக்கு கிடைக்க நான் முழு மூச்சுடன் இறங்குவேன்:

நாட்டின் வளங்களைச் சுரண்டியவர்கள், ஊழல் புரிந்தவர்கள், மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டவர்கள், மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்களை மக்கள்முன் நிறுத்தி அவர்களின் குற்றங்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

சமாதான

வார்த்தை மூலம் எடுக்கும் முயற்சிகளை நாம் கூட்டாக்குவிக்க திட்டமிட்டிருக்கிறோம் அரசின் முயற்சிகளை நாம் வரவேற்கிறோம் அத்துடன் தேவையான உதவிகளையும் வழங்க தயாராக இருக்கிறோம் என்றார்

எத்தனையோ போராளிகளை இழந்துதான் எதிரியின் கடற்படைத் தளம் தகர்க்கப்பட்டது.

எமது மக்கள் கிளாலி ஊடாக பயணம் செய்யும் போது கடற்படையினர்களால் கொலை செய்யப்படும் சம்பவங்களைக் கண்டு மிகவும் கவலைப்பட்ட எமது தலைவர் ஒருநாள் தளபதிகள், போராளிகளை அழைத்து எமது கடலிலே கடற்படையின் ஆதிக்கத்தினை குறைக்க வேண்டும். இதற்கு உறுதுணையாக இருக்கும் நாகதேவன்துறை கடற்தளம் தகர்க்கப்படவேண்டும் என்றார். அவரது திட்டமிடற்படி ஒரு வருடத்திற்கு முன் 11-11-93 அன்று அத்தளம் தகர்க்கப்பட்டது இன்று கிளாலிக் கடலிலே நாம் சுதேசமாக பயணத்தை மேற்கொள்கின்றோம், இதற்குக் காரணம் எமது போராட்டத்தின் பலம்.

எம்மிடம் வளமுண்டு. பலம் உண்டு நாம் இதனை வைத்து போராட முடியும் எனவே தமிழீழ போராட்டத்திலே மண்ணோடு மண்ணாக ஒன்றிப் பிணைந்து வீரச்சாவடைந்த மாவீரர்கள் விட்டுச் சென்ற பாதையை தொடரவேண்டும் என்றார்:

இவரைத் தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன். தியாகம் உட்பட விடுதலைப் புலிகளின் பல உறுப்பினர்களும் உரை நிகழ்த்தினார்கள். (86)

## ஓராண்டு நினைவு அலைகள்



கனகரத்தினம் மதிவதனன்
(நிருபன்)

பிறப்பு: 08. 04. 1974 வீரச்சாவு: 12. 11. 1993

சோகங்கள் வந்து
சொந்தங்கள் போனாலும்
நினைவுகள் எங்கள்
இதயத்தை விட்டுப் போகவில்லை
தண்ணீரில் மூழ்கிப் போராடும் நிலையில்
தவிக்கின்றோம் உன்னைத் தேடி...
எதனாலும் நிறையாத வறுமை இது
உங்கள் நினைவின்றி துயிலாத இதயம் எது
கவலையில் மூழ்கி மடிகின்ற போதும்
உடன் பிறப்பாம் போராளிகள் நடுவில்
உன் முகம் காணுகின்றோம்.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களதும் ஆன்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்
அப்பா, அம்மா,
அக்கா, தங்கை,
அத்தான்,
சிந்து, சங்கீதா (மருமக்கள்)

காக்கையன் குளம்,
மதினா நகர்,
இரணை இலுப்பைக் குளம்;

(சி-10695)

## ஓராண்டு நினைவஞ்சலி



லெப். கேணல் அபு (தாடி)
(பொன்னம்பலம் சரவணபவான்)

பிறப்பு 25. 09. 66 வீரச்சாவு 12. 11: 93

எங்களுடன் அன்பாகவும்
எதிரிக்கு அம்பாகவும்
வாழ்ந்த வரலாறே
இதயபூமியை இயக்கியவனே
நந்திக் கடலும் நாயாற்றுப் பெரு வெளியும்
காட்டில் ஓடும் ஒற்றையடிப் பாதையும்
நீ வளர்த்த துணைப்படை வீரர்களும்
உன்னை தேடுகின்றனர்
எங்கே என்று கேட்கின்றன
என்ன பதில் சொல்வோம்
சூரியனுக்கு அருகில் நின்ற
நம்பிக்கை நட்சத்திரமே
நீ பூநகரியில் விதையாகி
ஓராண்டு பூர்த்தியாகியும்
உன் நினைவிலே வாழ்கின்றோம்
நீ மீண்டும் உயிர் பெறுவாய்
விழுதெறிவாய்.

(10079) முல்லை மாவட்ட மக்கள்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி




மேஜர் பூவழகு / விக்கி
சண்முகநாதன் விக்னேஸ்வரன்

பிறப்பு 14-02-1965 வீரச்சாவு 12-11-1993

நல்ல தமிழ் மண்ணில் பிறந்து,
பண்பாடு தமிழைக் கற்று வளர்ந்து
தமிழர் படையாம் தமிழ் ஈழப் புலிப்படையில்
இணைந்து மிகு பல அதிவீர சாதனை புரிந்து
உயர் தகுதி பெற்று வெடி பொருள் பரிசோதனையில்
வீரச்சாவடைந்த விக்கி அவர்களுக்கு
எமது வீர அஞ்சலிகள்

(10027) குடும்பத்தினர்
நண்பர்கள்

## 31- வது நாளின் நீங்காத நினைவுகளில்...



மண்ணில்: 30,04.1925

மனங்களில். 13.10.1994

திரு. கு. திருச்சிற்றம்பலம்

எல்லாம் வல்ல ஒரு இறைவன்
கண்ணின் முன்னால் வந்து
என்ன வரம் வேண்டுமென்றால்-
நாங்கள்-
ஒன்றையே வேண்டுவோம்;
இன்னொரு தடவை
அந்தத் தந்தையின்
உயிரில் உதித்த குழந்தைகளாய்
அன்புப் பப்பாவின்
அணைப்பில் தூங்கும் பிள்ளைகளாய்
வாழ ஒரு பிறப்பு
தயவு செய்து;

ஓடோடி வந்து உதவி செய்து நின்றோர்க்கும் உற்ற துணையாக வந்து சோகம் பகிர்ந்தோர்க்கும் மெய்யுருகி நின்றெங்கள் நன்றிகள்.

-பிள்ளைகள்,
துணைவி,
குடும்பத்தினர்

'ராஜ் மகால்'
சாவகச்சேரி. (சி/10698)


**B A Part II**

விசேஷ கருத்தரங்கு

பாடம்:- கிறிஸ்தவ நாகரீகம்

இடம்:- புதிய உயர் கல்லூரி ஆரியகுளம்.

காலம்:- 12.11.94 (இன்று)

நேரம்: 2.30 p.m.

(10080)



5 வது வெற்றி வாரமாக

யாழ். **ஸ்ரீதர்** அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

**"இன்னும் ஒரு நாடு"**

தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00
சனி, ஞாயிறு காலை 10-30, 4-30, 6-30
சனி, ஞாயிறு 2.30 மட்டும்

ஒகஸ்ட் '94 ஒளிவீச்சு காண்பிக்கப்படும்.

(சி-10697)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது